தொலைபேசி எண்: 04146–229944 மின்னஞ்சல்: rmc.villupuram@gmail.com. அஞ்சல்பெட்டி எண்:8.

விழுப்புரம் விற்பனைக்குழு செயலாளர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: திரு.எஸ்.சந்துரு, எம்.எஸ்சி, (விவ.)

செ.மு.ஆ.எண்: ஆ1/3619/2023-5 நாள்:18.12.2024.

பொருள்: பணிக்குழு – விழுப்புரம் விற்பனைக்குழு – இளநிலை உதவியாளர் – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய ஒதுக்கீடு–திருமதி.மு.அவந்திகா, இளநிலை உதவியாளர் – பணியில் இணைந்தது –பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண்:978, வேளாண்மை துறை, நாள்:23.05.1985
2. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை–3. அவர்களின் கடித எண்:1916/PSD-B1/2023, நாள்: 08.08.2023.
3. செயலாளர், விழுப்புரம் விற்பனைக்குழு, விழுப்புரம் அவர்களின் செயல்முறை ஆணை எண்: ஆ1/3619/2023-5, நாள்:11.09.2023.
4. முதன்மை செயலாளர் / ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, சென்னை–32 அவர்களின் கடித எண்:விகுப.4/26022/2024, நாள்:11.12.2024.

*******

**ஆணை:**

பார்வை (2)இல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடிதத்தின்படி தொகுதி–IVஇல் அடங்கிய இளநிலை உதவியாளர்கள் பட்டியல் தேர்வு செய்யப்பட்டு கீழ்க்காணும் பணியாளர் விழுப்புரம் விற்பனைக்குழுவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளார்.

பார்வை (3)இல் காணும் இவ்வலுவலக உத்தரவின்படி, இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு பணியில் இணைந்துள்ள கீழ்க்காணும் பணியாளரின் பணியினை, பார்வை (1)இல் காணும் அரசாணை மற்றும் பார்வை (4)இல் காணும் கடிதத்தின் அடிப்படையில் "நியமன அலுவலர்" (Appointing Authority) என்ற முறையில் இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியேற்ற நாள் முதல் பார்வை (2)இல் காணும் கடிதத்தில் பத்தி எண்: (3)இல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல் மற்றும் பத்தி எண்:4இல் தெரிவிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டும் அன்னார் பணியில் சேர்ந்த 20.09.2023 முற்பகல் முதல் பணி வரன்முறை (Regularization) செய்து ஆணையிடப்படுகிறது.

" The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination–IV (Group –IV)".

கீழ்க்காணும் பணியாளரை பணிவரன்முறை செய்ததை தொடர்ந்து, 20.09.2023 முற்பகல் முதல் தொடர் மூன்றாண்டு காலத்தில் இரண்டாண்டு பணிக்காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர் பணிபுரியும் இடம் | பிறந்த தேதி | பணியேற்ற நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | திருமதி.மு.அவந்திகா<br>இளநிலை உதவியாளர்<br>தலைமை அலுவலகம்,<br>விழுப்புரம் விற்பனைக்குழு,<br>விழுப்புரம் | 20.04.1997 | 20.09.2023 மு.ப. | 20.09.2023 மு.ப. |

மேற்காணும் பணியாளர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் வேளாண் விற்பனை துறைத்தேர்வு (Agricultural Marketing Department Employees Test), தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வு (DOM) மற்றும் பவானி சாகர் அடிப்படை பயிற்சி ஆகியவற்றில் தவறாது தேர்ச்சி பெறவேண்டும் என ஆணையிடப்படுகிறது.

செயலாளர்
விழுப்புரம் விற்பனைக்குழு
விழுப்புரம்

18/12/24

பெறுநர்:
திருமதி.மு.அவந்திகா
இளநிலை உதவியாளர்
தலைமை அலுவலகம்,
விழுப்புரம் விற்பனைக்குழு,
விழுப்புரம்

நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

1. முதன்மை செயலாளர் / ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, சென்னை–32
2. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.

நகல்: அ2 பிரிவு.

நகல்: பணிப்பதிவேடு.

நகல்: கோப்பிற்கு.

நகல்: இருப்பு கோப்புக்கு